**Vol:4 Issue 2 Nov.2020** **P.g No: 16 - 22**




ISSN : 2456-821X

***கட்டுரையாளர் :***

***முனைவர் சு. சிவசந்திரகுமார்***

உதவிப்பேராசிரியர்
தூய நெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர்-635601.

shctpt.edu

## சிறுபாணாற்றுப்படை : உரைமரபும் திறனாய்வும்

முன்னுரை

மூலநூலாசிரியரின் மொழியமைப்பினைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள உரையாசிரியர்கள் இன்றியமையாத உதவியாகின்றனர். இவ்வுரையாசிரியர்களின் துணை கொண்டு மூலநூல்காராரின் மூலப்பாடம் உணர்த்தும் சமூக, அரசியல், பண்பாட்டு மாற்றங்களை இனம் காண வேண்டியுள்ளது. இலக்கியம் போன்ற பாடங்களைப் பயிற்றுவதற்கு தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்வதே (from the know to the unknow) பொருத்தமானதாகும் என்பார் கா.சிவத்தம்பி.[1] (கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழ் கற்பித்தல், ப.32)எனவே, நடைமுறையில் சங்க பிரதிகளுக்கு வழங்கிவரும் தெளிவுரை, விளக்கத்தினின்று உரைகாரரர் மரபு வழியாகச் சிறுபாணாற்றுப்படை மூலநூலை

அணுகும் முறையை விளக்குவதையே இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது. இம்முறையில் சிறுபாணாற்றுப்படை 84-ஆம் அடி முதல் 126-ஆம் அடி வரை நோக்கப்படுகின்றது.

உரை வழிகள்

இத்தகைய பயிற்று முறையில் இடம்பெறும் வழிமுறைகள் இருவகைப் பாற்பட்டது.

i) நயத்தல் முறை ii) விமர்சித்தல் முறையிலானது

விமர்சனம் அல்லது திறனாய்வு என்பது மேலை நாட்டுக் கல்வியின் காரணமாகத் தமிழாய்வுலகில் முகிழ்த்தவொன்று. எனவே, தெரிந்த அல்லது தற்காலத்தில் இலக்கியத்தின் மீதான வாசிப்பு என்ற முறைமையின் அடிப்படையில் எடுத்துக்கொண்டு அணுகலாம். ஆகவே, i) நயத்தல், ii) விமர்சித்தல் என்ற முறைமை விமர்சித்தல் , நயத்தல் என்னும் அடிப்படையில் இவ்விடயம் நோக்கப்படுகின்றது.

விமர்சித்தல்

‘சிறுபாணாற்றுப்படை தெளிவுரையும் விளக்கமும்’ என்ற நூல் சங்க இலக்கியம் பத்துப்பாட்டு வரிசை என்னும் அடிப்படையில் செல்லப்பா பதிப்பகத்தால்; ம.திருமலை அவர்களால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. நவம்பர் 2007-ஆம் ஆண்டு வெளிவந்த இந்நூல் ‘சங்க இலக்கிய உரை’ என்ற தன்மையில் அடங்கும். ஆயினும், நூலாசிரியர்; இலக்கியத் திறனாய்வுத் துறைத் தலைவர் என்ற அடிப்படையில் திறனாய்வு கொண்டு அணுகிய விடயங்களை ‘சிறுபாணாற்றுப்படையின் அமைப்பும் அழகும்’ என்ற தலைப்பினுள் குறிப்பிட்டுள்ளார் . இதன்படி, சிறுபாணாற்றுப்படையைச் ‘சிறப்ப பாட்டு’ என நிறுவுவதற்காகச் சிறுபாணாற்றுப்படையில் இடம் பெற்றிருக்கும் பொருட்கூறுகளை 13 பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளார்.

இப்பொருள் கூறுகளையும்,

i) தலைமை நிகழ்ச்சிகள்

ii) துணை நிகழ்ச்சிகள் எனப் பாகுப்படுத்தியுள்ளார்.

தலைமை நிகழ்ச்சியானது இலக்கிய படைப்பின் கருவுடன் தொடர்புடையது என்றும்,

துணை நிகழ்ச்சிகள் ஒரு பொருள் தொடர்பு கொண்டு இணைக்கப்படுவதன் மூலம் சிறுபாணாற்றுப்படைக்கு ஒரு கட்டமைப்பு ஏற்படுகிறது என்றும் குறிப்பிடுகின்றார். ஓர் இலக்கியப் படைப்பின் பல்வேறு உத்திகளையும் தாங்கி நிற்கும் ஓர் அடிப்படையான கூறு கட்டமைப்பு எனப்படும் என்பதும் இந்நூலில் இடம்பெறும் செய்தியே. சிறுபாணாற்றுப் படையினை 13 பொருட்கூறுகளாகப் பகுத்துள்ள ம.திருமலை பொருட்கூறுகள் நான்கு, ஐந்து முறையே,

i) மூவேந்தர்களாக சேரர், பாண்டியர், சோழர் வலிமை குன்றிய நிலையிருத்தல்.

ii) பேகன், பாரி, காரி, ஆய், அதியமான், நள்ளி ஓரி ஆகிய ஏழு பெரு வள்ளல்களும் இல்லாத நிலை

இவ்விரு பொருட் கூறுகளையும் துணை நிகழ்ச்சிகளாகக் கொள்ளலாம் என்றுரைப்பார்.

மேலும், சிறுபாணாற்றுப்படை சிறப்பப்பாட்டு என்பதை விளக்க வந்த ஆசிரியர் “சிறுபாணாற்றுப்படையின் தொடக்கம் முதல் இறுதிவரை எவ்விதமான பிறழ்வுமின்றி நிகழ்ச்சிகள் ஒரு சீர்மையாக இடம் பெற்றிருக்கின்றன.

**பாலை நிலத்தின் தன்மை**
**விறலியின் நிலை**
**மூவேந்தர்கள் பற்றிய செய்தி**
**நல்லியக்கோடனின் குடிமக்களின் இயல்பு**
**பாலை, முல்லை, மருதம், நெய்தல், என்ற நான்கு நிலங்களின் இயல்புகள்**
**நல்லியக்கோடன் இரவலர்களை ஏற்று விருந்தோம்பும் முறைகள்**

shetpt.edu

முதலிய பொருட்கூறுகள் மிகப் பொருத்தமாகச் சிறிதும் தொய்வின்றிச் சுவைபடக் கூறப்படுகின்றன. இதனால் சிறுபாணாற்றுப்படையையும் ‘சிறப்ப பாட்டு’ என்றே கூறலாம் என்று குறிப்பிடுகின்றார்.

பிறழ்வின்றி நிகழ்ச்சிகள் சீர்மையாக இடம் பெற்றுள்ளதெனில் ஏன் மூலநூல் ஆசிரியன் கடையேழு வள்ளல்களைக் குறிப்பிட்டுள்ளார் அல்லது சீர்மைக்குள்ள நிகழ்ச்சிகளை அடுக்கும்போது உரையாளாரால் (ம.திருமலை) துணை நிகழ்ச்சிப் பொருட்கூறு ஐந்து விடப்பட்டுள்ளது ஐயத்திற்குரிய விடயமாகும்.

புரவலர்கள் இன்மை X நல்லியக்கோடன்

துணை நிகழ்ச்சி நான்கு ஐந்து முறையே உலகத்தைக் கொடையால் புரக்கின்ற மூவேந்தர்களும் கடையேழு வள்ளல்களும் இல்லை என்ற செய்தியை விளக்குகின்றது என்கிறார் திருமலை. ஆனால், மூலநூல் குறிப்பு அப்படி இல்லை. கடையேழு வள்ளல்கள் இல்லை. ஆனால் மூவேந்தர்கள் வலிமை குன்றிய நிலையிலிருத்தல் என்பது பொருட்கூறுகளின் பகுப்பு தரும் செய்தி என்றால் இவ்விடுபாடு எதனைக் குறிக்கின்றது என்ற வினா எழுகின்றது. எனவே, விமர்சித்தல் என்ற நிலையிருந்து நயத்தல் எனும் முந்தைய நிலைக்குச் செல்வதற்குப் பல்வேறு உரைகாரர்கள் துணையாக இருப்பினும் நச்சினார்க்கினியரை இக்கட்டுரைக் கவனத்தில் கொள்கிறது.

**உரைத் திறனாய்வு**

உரைத் திறனாய்வு இரண்டு வகைப்படும்.

i) மூலநூலை ஆழ்ந்து கற்று, நூலாசிரியரின் உள்ளக் கருத்தறிந்து நூலுக்குப் பொருள் கூறி விளக்குதல்.
ii) தமக்கு முன் இருந்த உரையாசிரியர்கள் எழுதிய உரைகளை மதிப்பிட்டுக் கூறுதல்.

இதனுள் முதல் வகையைத் தனக்கானதாக நச்சர் கொள்வார். அதற்கு மாட்டு என்னும் உத்தியைக் கைகொண்டு சிறுபாணாற்றுப் படையின் முதலடிக்கே பொருள் கூறியுள்ளார்; என்பது நாமறிந்ததே. இந்நிலையில் இலக்கிய உரையாசியரிகளின் தொடரியல் கோட்பாட்டை ஆராய்ந்த ஆ.தசரதன் 3552 வரிகள் கொண்ட பத்துப் பாட்டை நச்சினார்க்கினியர் தொடரமைக்கும் போது 190 தொடர்களாகக் கொண்டுள்ளதாகவும்; குறிப்பாக, சிறுபாணாற்றுப்படை 269 வரிகள் 12 தொடர்களில் நச்சரால் உரை கூறப்பட்டுள்ளது என்பதாகவும் பகுத்துள்ளார் [2] (ஆ.தசரதன், இலக்கிய உரையாசிரியர்களின் தொடரியல் கோட்பாடுகள், ப.61)

இவ்விடத்து கடையேழு வள்ளல்கள் இடம்பெறும் 84-ஆம் அடி முதல் 126-ஆம் அடிவரை நச்சினார்க்கினியர் உரையை உற்று நோக்கினால் "கறங்கும் மணிவால் உளை புரவியொடு வையகம் ஈரம் நல்மொழி மருள இரவலர்க்கு ஈந்த காரி (95) ஒலிக்கும் மணியினையும் வெள்ளிய தலையிட்டத்தினையுமுடைய குதிரையோடே தனது நாட்டினையும், அருளினையுடைய நன்றாகிய மொழியினையும் ஏனையோர் கேட்டு வியக்கும்படி இரவலருக்குக் கொடுத்த காரி" என்று குறிப்பிட்டு, "ஈர நன்மொழி மருள வென்று மாறுக" என்றும் குறிப்பிட்டுள்ளார். மொழியினையும் என்பதிலுள்ள 'ஐ' இரண்டன் தொகை பெறலும் என்ற பொருளிலும் இரவலருக்கு என்பதிலுள்ள 'கு' நான்கன் தொகை கொடுத்தல் பொருளுமாகக் கொண்டால் மொழியை ஏன் இரவலருக்குக் காரி கொடுக்க வேண்டும் என்ற ஐயப்பாடு தோன்றுகிறது.

இஃது உரைகாரருக்கு உடன்பாடு என்பதினாலே "ஈரநன்மொழி மருள வென்று மாறுக" என்று குறிப்பிட்டுள்ளார். இவ்விடத்தில் விமர்சித்தல் முறையில் அணுகிய உரைகாரரான ம.திருமலையின் கூற்று நினைவு கூரத்தக்கது.

மூவேந்தர்கள் வலிமை குன்றியிருத்தல் என்பதுடன் பொருட்கூறினை அடக்காமல் கூடுதலாக கடையேழு வள்ளல்களைக் குறிப்பிட்டுள்ளதெனினும் கடையேழு வள்ளல்களின் கொடைப்பொருள் மரபில் மொழி என்ற ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது உற்று நோக்குதற்குரியது. இதற்கு, மேலும் ஓர் முடிபாகப் புறம் 158-ஆவது பாடலைக் சான்றாக்கலாம். இதனுள் இடம்பெறும் கடையேழு வள்ளல்கள் பட்டியலில் திருந்துமொழி மோசி பாடிய ஆயும் என்ற வரி கவனிக்கத்தக்கது. எனவே, மூலநூலை அணுகும்போது விமர்சித்தல் முறையில் தனக்கு ஏற்புடைய பொருட்கூறுகளை எடுத்துக்கொள்வதும்; நயத்தல் முறையில் அணுகும்போது மேலும் ஒரு முடிபு சொல்லுதலும் மரபாகக் கொள்ளப்பட்டுள்ளது என்பது பெறப்படுகின்றது.

**தொகுப்புரை**

❖ இலக்கியங்களைப் பயிற்றுவதற்கு தெரிந்ததிலிருந்து தெரியாத ஒன்றிற்குச் செல்லுதல் ஏற்புடையதாகும் என்ற அடிப்படையில் சிறுபாணாற்றுப் படையின் 84-ஆம் அடி முதல் 126-ஆம் அடி வரை எடுத்துக் கொள்ளப்பட்டது.

❖ இவ்வடிகளை கடந்து சென்ற உரைகாரர்களை விமர்சித்தல், நயத்தல் என்னும் இரு பிரிவினருள் அடக்கலாம். விமர்சித்தல் (திறனாய்வாளர்) முறைக்கு ம.திருமலை அவர்களின் உரையும் நயத்தல் (உரைகாரர்) முறைக்கு நச்சினார்க்கினியரின் உரையும் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

❖ சிறுபாணாற்றுப்படையின் அமைப்பு 13 பொருட்கூறுகளாக ம.திருமலை அவர்களால் பகுக்கப்பட்டுள்ளது. இதனுள் 84-ஆம் அடி முதல் 126-ஆம் அடி வரை துணை நிகழ்ச்சி என்ற அடிப்படையில் பொருட் கூறு ஐந்தாக அமைகின்றது. சிறுபாணாற்றுப்படையின்

கட்டமைப்பிற்கு இப்பொருட் கூற்றின் பொருத்தப்பாடு தெளிவுற விளக்கப்படவில்லை என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

❖ நயத்தல் முறைக்கு சான்றாக நச்சினார்க்கினியர் உரை எடுத்துக் கொள்ளப்படுகின்றது. 84-ஆம் அடி முதல் 126-ஆம் அடி வரை இடம்பெறும் அடிகளில்; 'ஈர நன்மொழி இரவலருக்கு ஈந்த காரி' என்னும் அடியின் உரை உற்று நோக்கப்பட்டுள்ளது. இதற்கு நச்சர் மேலும் ஒரு முடிவு கூறியுள்ளார். ஈர நன்மொழி மருள வென்று மாறுக என்பது அம்முடிவு. எனவே, விமர்சித்தல் முறையில் பொருட்கூறுகள் தங்கள் கருத்துகளின் வலிமைக்கு ஏற்ப இடம் மாறுதலும் நயத்தல் முறையில் மேலும் ஓர் முடிபு சொல்லி செல்லுவதும் உரையின் இயல்பு அல்லது நெறிகளாக உள்ளன என்ற கருத்து முன்னிருத்தப்படுகிறது.

**நிறைவுரை**

இலக்கியத்தைப் பயில்வதற்கு விமர்சித்தல் நயத்தல் என்ற முறைமை ஏற்புடையதாக இருக்கின்றது. இலக்கிய ஆய்விற்குச் செல்வதற்கு இவ்வழியின் பொருத்தப்பாட்டைப் பார்க்கின்றபோது ஆய்விற்கான வினாக்களைத் தொடுப்பதற்கு அல்லது தோற்றுவிப்பதற்கு இஃது ஏற்புடைய களமாகவே தோன்றுகிறது.

ஆய்விற்கு உதவியன


1. …… பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் கபீர் அச்சகம் நான்காம் பதிப்பு.1950.
2. அரவிந்தன் மு.வை., உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், மூன்றாம் பதிப்பு.1995.
3. சிவத்தம்பி கார்த்திகேசு, தமிழ் கற்பித்தல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.2007.
4. தசரதன்.ஆ. இலக்கிய உரையாசிரியர்களின் தொடரியல் கோட்பாடுகள். இன்டர்நேஷனல் பிரிண்டர்ஸ். 1983.
5. திருமலை.ம., சிறுபாணாற்றுப்படை தெளிவுரையும் விளக்கமும் செல்லப்பா பதிப்பகம், 2007.